கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

பங்குனி மாத இதழ்
NEWS BULLETIN
MARCH 2021
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 முதல்	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட, கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தவணையும், ஆசிரிய வேதனத்துக்காகத் தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்ககொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
28/3/21	**ஈஸ்ரர் விடுமுறை (இரு வாரங்கள்)**
சித்திரை	OFAAL எழுத்துப் பரீட்சை எதிர்வரும் சித்திரை மாதம் நடைபெறும்.

தமிழ்த் திறன் போட்டிகள் 2021

கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையின், தமிழ்த்திறன் போட்டிகள் எதிர்வரும் **02/05/2021** ஞாயிற்றுக்கிழமை ZOOM தளத்தினூடாக நடைபெறவிருப்பதால், போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வகுப்பாசிரியர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி* ~~* 03/04/2021 *~~

பாலர் பிரிவு

6 வயதிற்கு உட்பட்டவர்கள் -31/08/2014 பின்பு பிறந்தவர்கள்* (தற்போது ஆங்கிலப் பாடசாலையில் Nursery, Reception, ஆண்டு1 படிப்பவர்கள்)*

1)பாடல் - பாடப் புத்தகத்தில் உள்ள ஒரு பாடல் 2 நிமிடங்கள்
2)கதை - ஏதாவது- 2 நிமிடங்கள்
3)மனனம்= 03 திருக்குறள்/ஆத்திசூடி
4)பேச்சு - விரும்பிய தலைப்பு - 1-2 நிமிடங்கள்

ஆரம்பப் பிரிவு

6-8 வயதிற்கு உட்பட்டோர்

(தற்போது ஆங்கிலப் பாடசாலையில் ஆண்டு2 ஆண்டு3 படிப்பவர்கள்)

(31/08/2014-01/09/2012)

1.பாடல்=புத்தகத்தில் உள்ள ஒரு பாடல் - 2 நிமிடங்கள்
2.கதை :- ஏதாவது - 2 நிமிடங்கள்
3.மனனம்:- புதிய ஆத்திசூடி
திருக்குறள் 5 (கடவுள் வாழ்த்து)
4)பேச்சு - விரும்பிய தலைப்பு - 2 நிமிடங்கள்

கீழ்ப்பிரிவு

8-10 வயதிற்கு உட்பட்டவர்கள்

(31/08/2012-01/09/2010)* (தற்போது ஆங்கிலப் பாடசாலையில் ஆண்டு4 ஆண்டு5 படிப்பவர்கள்)*

1)பாடல்:-
பாரதியார் பாடலில் ஒன்று 2 நிமிடங்கள்
2)தனிநடிப்பு= விரும்பியதைத் தேர்வு செய்யலாம் 2-3 நிமிடங்கள்
3)மனனம்= பழமொழிகள் (05) பொருளுடன்
திருக்குறள்(07) அன்புடமை (அதிகாரம் 8)
4)பேச்சு:- தமிழ்ப்பண்டிகை 3 நிமிடங்கள்
நான் விரும்பும் பெரியார் 3 நிமிடங்கள்
5)கவிதை:- 1.தாய்ப்பாசம்
2.இயற்கை (3 நிமிடங்கள்)

மத்திய பிரிவு

10-12 வயதிற்கு உட்பட்டோர்

(31/08/2010-01/09/2008)*

(தற்போது ஆங்கிலப் பாடசாலையில் ஆண்டு6 ஆண்டு7 படிப்பவர்கள்)*

1.மனனம்:- திருக்குறள் (10) 2 பொருளுடன் விருந்தோம்பல் (அதிகாரம் 9)
பழமொழிகள் 10 பொருளுடன்
கொன்றை வேந்தன் 10 பொருளுடன்
2.பேச்சு:- 1.கல்வியின் முக்கியத்துவம் 4 நிமிடங்கள்
2.தமிழ் மொழியின் சிறப்பு 4 நிமிடங்கள்
3.செல்லப்பிராணி 4 நிமிடங்கள்
3.கவிதை:- விரும்பிய தலைப்பு 2-3 நிமிடங்கள்
4.தனி நடிப்பு= விரும்பியதைத் தேர்வு செய்யலாம் 2-3 நிமிடங்கள்

மேற்பிரிவு


12வயதிற்கு மேற்பட்டோர்* 31/08/2008க்கு முதற் பிறந்தவர்கள் (தற்போது ஆங்கிலப் பாடசாலையில் ஆண்டு8ம் அதற்கு மேல் படிப்பவர்களும்)

1.மனனம்:- திருக்குறள் 20 (10)பொருளுடன்

(நட்பு செய்நன்றி அறிதல்)


2.பழமொழிகள் (20) பொருளுடன்
3.பேச்சு:- 1.சிலப்பதிகாரம் (5 நிமிடங்கள்)
2.ஊடகங்களின் முக்கியத்துவம்
3.மனிதநேயம் (5 நிமிடங்கள்)
4.கவிதை =3 நிமிடங்கள்
1.அன்புள்ள அப்பா
2.தாயகத்தின்வலி
3.விவசாயி.

போட்டிகள், பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒருவர் ஒன்று அல்லது இரண்டு போட்டிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். போட்டியின்போது உச்சரிப்புத் தெளிவு, தொனி, பொருத்தமான உடல் அசைவுகள் என்பவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.



அன்னையர் தினமும் அனைத்துலகப் பெண்கள் தினமும்.

ஒரு உயிரைத் தன் கருவிலே சுமந்து இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய உன்னதமான உறவே அம்மா. "அம்மா" என்கின்ற அந்த ஒற்றைச் சொல்லுக்குள் ஆயிரமாயிரம் அர்த்தங்களும், அர்ப்பணிப்புகளும் அமிழ்ந்து கிடக்கின்றன. ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமல்ல ஒவ்வொரு நாளுமே அன்னையர் தினம்தான். அன்னையாய் அன்பைப் பொழியும் பெண்களைப் போற்றி வாழ்த்துவோம்.



ஈஸ்ரர்

ஈஸ்ரர் 46 நாட்கள் கொண்ட நோன்பு (Lent) காலத்தின் முடிவில் வருகிறது. புனிதவாரம் விபூதிப் புதன்கிழமையுடன் (Ash Wednesday) ஆரம்பமாகி, ஈஸ்ரர் ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகிறது. புனித வியாழன் யேசுபிரானின் கடைசி இராப்போசனத்தையும், பெரிய வெள்ளி அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததையும் குறிக்கிறது. அந்தப் புனிதவாரம் ஞாயிற்றுக்கிழமை அவரது திருமீட்டெழுச்சியைக் குறிப்பதுடன் நிறைவெய்துகிறது. அவர் உயிர்த்தெழுந்த தினத்தோடு பல மரபார்ந்த அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மிக முக்கியமாக முட்டையும், முயலும் உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

சகல உயிர்களும் முட்டையிலிருந்து வருவதாக கருதப்பட்டதாலும், முட்டை வளத்தையும், புது வாழ்வையும் குறிப்பதாலும் ஈஸ்டரோடு இணைக்கப்பட்டுள்ளது. வசந்தகால ஆரம்பம் என்பதால், அவை வண்ணமூட்டப்படுகின்றன.

அதுபோலவே ஈஸ்ரர் Bunny/Hare எனப்படும் முயல் இனமும் அதிக குட்டிகளை ஈன்று சந்ததியைப் பெருக்கி வளமாக வாழ்வதால் ஈஸ்டரோடு தொடர்பு பொருத்தப்பட்டுள்ளன.
இவைகளை அடையாளப் படுத்தும் வகையில், இனிப்புப் பண்டங்கள் (chocolates) மற்றும் பரிசுப் பொருட்கள் இவற்றின் வண்ண உருவங்களில் தயாரிக்கப்படுகின்றன.